**தலைப்பு 04 – மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் செலவினத் தலைப்பின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் செலவினத் தலைப்பிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**தலைப்புகளை மாற்றி செலவினங்களை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 04 செலவினத் தலைப்புகளுக்குரிய 02 வாகனங்களின் காப்புறுதி மேவுகை செலவினம் ரூபா 61,948 தொகை 234-01-01-1301 மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | இவ்வாகானங்கள் மீயுயர் நீதிமன்ற அலுவலகத்தின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதால் 234 ஆம் இலக்க தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டது | நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்துள்ள செலவினத் தலைப்பிற்குரிய செலவினம் அச்செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) 234 ஆம் செலவினத் தலைப்பிற்குரிய 03 வாகனங்களின் காப்புறுதி மேவுகை செலவினம் ரூபா 77,436 தொகை 04-01-01-1301 மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | இவ்வாகனங்கள் 04 தலைப்புகளின் கீழ் நீதிபதிகளின் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக | நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்துள்ள செலவினத் தலைப்பிற்குரிய செலவினம் அச்செலவினத் |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்தப்படுவதால் இச்செலவின தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டது. | தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (இ) | 234 ஆம் செலவினத் தலைப்பிற்குரிய குழாம் வாகனமொன்றின் ரூபா482,550 ஆன திருத்தச் செலவினம் 04-01-01-1301 இன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | இவ்வாகனம் கௌரவ நீதிபதிகளின் உத்தியோகபூர்வ வாகனம் (பென்ஸ் கார்) திருத்த வேலைக்காக இணைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நீதிபதிகளுக்காக இணைக்கப்பட்டமையால் திருத்தச் செலவினம் 04-01-01-1301 இன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டது | நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்துள்ள செலவினத் தலைப்பிற்குரிய செலவினம் அச்செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2102 மற்றும் 2103 செலவின விடயங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் முறையே ரூபா 9,570,000 தொகையும் ரூபா 11,754,000 தொகையும் நிதிப் பிரமாணம் 66/69 இன் மூலம் முறையே ரூபா 3,200,000 மற்றும் ரூபா 2,297,000 என முறையே ரூபா 12,770,000 மற்றும் ரூபா 14,051,000 ஆன மேலதிக நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் ஆண்டின் இறுதியில் அச்செலவின விடயங்களில் முறையே ரூபா 12,545,288 மற்றும் ரூபா 7,879,482 ஆன நிதி சேமிக்கப்பட்டமையால் திட்டமிடல் இல்லாமல் மேலதிக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 04-01-02-2102 - ரூபா 3,200,000 (அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள்) 04-01-02-2103 - ரூபா 2,297,000 (இயந்திர மற்றும் உபகரணங்கள்) மீயுயர் நீதிமன்றத்திற்காக புதிய நீதிபதிகளின் நியமனத்துடன் தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கருத்திற் கொள்ளப்பட்ட போது தேவையான நிதிஏற்பாடு போதாமையால் நி.பி 66 இன் கீழ் நிதிஏற்பாடு மாற்றப்பட்டது. | தேவைப்பாட்டின் பிரகாரம் முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு மேலதிக நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேறகொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 06 ஆம் இலக்க வழிகாட்டியின் 3.4 பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் கடப்பாடு மற்றும் பொறுப்புக் கூற்று திறைசேரி பொறுப்புக்கூற்றுக்களுடன் இணங்க வேண்டிய போதிலும் திறைசேரி பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா 1,180,529 தொகையான 14 பொறுப்பு உருப்படிகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியால் விநியோகிக்கப்பட்ட பொறுப்பு பதிவேட்டில் Sri Lnka Telecom தவிர ஏனைய பொறுப்புக்கள் தவறுதலாக CIGAS பதிவு செய்யப்பட்டதாக இருந்ததுடன் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 06 ஆம் இலக்க வழிகாட்டியின் 3.4 பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடு மற்றும் பொறுப்புக் கூற்றில் அறிக்கையிடாத எந்தவொரு பொறுப்பொன்றும்முன்னைய ஆண்டின் செலவினமாக தீர்வுசெய்யக் கூடாத போதும் மீளாய்வாண்டின் நிதிககூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்த ரூபா 70,770 ஆன பொறுப்புக்கள் செலவினங்களுக்காக 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் உரிய பட்டியல் 2020.12.31 ஆந் திகதியின் பின்னர் கிடைத்திருந்ததுடன் அத்தன்மையிலான செலவினம் மாதாந்தம் அவ்வப்போது ஏற்படுவதால் கொடுப்பனவு செயற்பாடுகள் இடம் பெறுவதாக அறிவிக்கப்படுவதுடன் இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு ரூபா 62,051.20 தொகை கொடுப்பனவு செயவதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வங்கிக் கணக்கு செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கு தொடர்பான கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 2,334,402 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சரியான மீதி ரூபா 17,759,887 ஆக இருந்தது. | தவறுதலாக 2020.12.01 உள்ளவாறு மீதி சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் 2020.12.31 இல் உள்ளவாறு மீதி ரூபா 17,759,887.03 என சீராக்கப்பட வேண்டும் | சரியான தகவல்கள் பதிவு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | 2020 மார்ச் 24 திகதிய ரூபா 46,600 பெறுமதியான 751867 ஆம் இலக்க காசேலை இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக 752077 ஆம் இலக்க காசோலை வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 392(அ)i, 32(ஆ) iii, 393(i) மற்றும் 393(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2020.03.24 ஆந் திகதிய 751867 ஆம் இலக்க காசோலை தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் 06 மாதங்கள் கடந்ததன் பின்னர் காலாவதியான இரத்துச் செய்யப்பட்ட காசோலை என்பதால் புதிய காசோலையை வழங்குவதற்கு முன்னர் வங்கிக்கு கொடுப்பனவை இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 2020.12.08 ஆந் திகதியில் உள்ளவாறு இக்காசோலை 8 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்ததன் பின்னர் புதிய காசோலையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 387 இன் பிரகாரம் அரச வங்கி கணக்குகளில் மேலதிகப் பற்று பெறுவது தடுக்கப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டின் திசெம்பர் 20 மற்றும் 23 ஆந் திகதிகளில் வங்கி நடைமுறைக் கணக்குகளில் முறையே ரூபா 3,757,495 மற்றும் ரூபா 4,901,237 ஆன மேலதிகப்பற்று காணப்பட்டதுடன் அதன் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேலதிகப் பற்று வட்டியாக | 2020 திசெம்பர் மாதம் செலவின தலைப்பு 04 இற்குரிய சம்பள கொடுப்பனவுகள் 234 ஆம் இலக்க கணக்கிற்கு மாற்றப்பட்டமையால் திசெம்பர் 20 மற்றும் 23 ஆந் திகதிகளில் வங்கி மேலதிக பற்று கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது. 2020.12.31 ஆந் திகதி | நிதிப்பிரமாணம் 387 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வங்கியினால் ரூபா 8,030 அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் 01 ஆந் திகதியில் நடைமுறைக் கணக்கில் மேலதிகப் பற்று ரூபா 5,030 ஆக இருந்தது. | பொது திறைசேரியின் வங்கிக் கணக்கிற்கு பணம் அனுப்பியதன் பின்னர் ஏற்பட்ட மேலதிக பற்றின் மீது ரூபா 200 மேலதிக கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருவதுடன் பூர்த்தி செய்யப்பட்டதுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 மடிக் கணனிகளையும் 14 கணனிகளையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,989,000 மற்றும் ரூபா 2,529,352 ஆன பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் குறித்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட செயலாற்றல் பிணை பொறுப்பினை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 14 மடிக் கணனிகளையும் 14 கணனிகளையும் கொள்வனவு செய்தமைக்கான பட்டியல் உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கோரப்பட்ட பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் பட்டியலை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 திசெம்பர் 11 ஆந் திகதி வாகன திருத்த வேலைக்களுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையிலும் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வண்டி கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் முழு மதிப்பீட்டுப் பெறுமதி யான ரூபா 1,891,250 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. . | வண்டியின் உதிரிப்பாகங்கள் சிலவற்ற தாய் நிறுவனத்திடமிருந்து கொண்டு வருவதற்கு தேவையாக இருப்பதால் வண்டி திருத்தி பூர்த்தி செய்வதற்கு 03 மாதங்கள் அளவில் எடுப்பதாக பொறியியலாளர் அறிவித்திருந்தார். பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்பாடு இடம்பெறுவதால் இந்த உதிரிப்பாகங்களை கொண்டுவர வேண்டியுள்ளதாக பொறியியலாளரால் தெரிவிக்கப்பட்டது. ஆதலால் கணக்காய்வு திகதி வரை வண்டி மீயுயர் நீதிமன்றத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | திருத்த வேலைகள் முறையாக நிறைவேற்றப்படும் என்பதை உறுதிப்படுத்தி பட்டியலை அடிபபடையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்கள் நடாத்தப்பட்டிருந்த 14 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுத் தீர்மானங்களுக்காக அந்தந்த குழுக்களின் இணக்கப்பாட்டினை 2021 பெப்ரவரி 15 ஆந் திகதி பெற்றுக் கொள்ள்பபட்டிருக்கவில்லை. | கேள்விக் குழு கூட்டம் நடாத்தப்படும் வேலைகளில் குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களால் இணக்கப்பாட்டின் பேரில் எடுக்கப்படும் பரிந்தரைகள் மற்றும் தீர்மானங்கள் குழு குறித்துக் கொண்டு பின்னர் அறிக்கை தயாரிக்கப்பட்டு கையொப்பத்திற்காக அனுப்பி வைக்கப்படுகின்றது. அறிக்கை தயாரிப்பதில் தாமதம் காரணமாக அங்கத்தவர்களின் கையொப்பத்தை பெற்றுக் கொள்வதற்கு தாமதமாகின்றது. | கூட்டத்தின் போது எடுக்கம் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றிற்காக இணக்கப்பாட்டை அச்சந்தர்ப்பத்திலேயே பெற்றுக்கொளள்ல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டின் போது மேற்பார்வை அமைச்சினால் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த வாகனத்தின் உரித்தினை கையேற்பதற்கு 2021 பெப்ரவரி 03 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வண்டியின் உரித்தினை உயர் நீதிமன்றத்திற்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |